# <u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, காஞ்சிபுரம்</u>

## <u>சிசி.186/2020</u>

## <u>நாள்–04.08.2026</u>

**அரசு தரப்பு சாட்சி– அ.சா.3**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | ரமேஷ்குமார் |
| **தகப்பனார்/கணவர் பெயர்** | : | |
| **கிராமம்** | : | |
| **தாலுக்கா** | : | |
| **ஜாதி** | : | |
| **மதம்** | : | |
| **தொழில்** | : | |
| **வயது** | : | |

2023ம் வருடத்திய சாட்சி சட்டத்தின்படி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் வல்லம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளர் பொறுப்பில் இருந்து வருகிறேன். கடந்த 2021 வருடத்தில் இணை எண்.4 சார்பதிவாளராக காஞ்சிபுரத்தில் பணிபுரிந்த போது இந்த வழக்கு சம்மந்தமாக காஞ்சிபுரம் மாவட்ட குற்ற பிரிவு போலிசார் ஆவண எண்.139/2004, 2022/2009, 1496/2016 ஆகிய ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை கேட்டுயிருந்தார்கள். மேலும் போலிசார் 139/2004, 1496/2016 ஆகிய ஆவணங்களின் கைரேகை பதிவுகள் மற்றும் அதன் புகைப்படங்களையும் கேட்டுயிருந்தார்கள். அதன் பேரில் மேற்சொன்ன ஆவணங்களை சான்றிட்ட நகல்களையும் கொடுத்து, கைரேகையை புகைப்படம் எடுக்க அனுமதித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவண எண்.139/2004, 2022/2009, 1496/2016

ஆகிய ஆவணங்களின் நகல்கள் நான் கையொப்பம் போட்டு கொடுத்துதான். **அந்த ஆவணங்கள் முறையே அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் விசாரணை செயத்தார்கள்.

**1, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசாரால் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் யாருக்கு முகவரி செய்யப்பட்டுயிருந்து என்று கேட்டால் இணை எண்.4 சார்பதிவாளர் என்ற பெயருக்கு முகவரி செய்யப்பட்டுயிருந்தது. அன்றைய தேதியில் நான் தான் அந்த பொறுப்பில் இருந்தேன். நான் கொடுத்த ஆவணங்கள் மதிப்புறு ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு இத்தகைய ஆவணங்களை கொடுக்கவேண்டும் என்று மேல் அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வேண்டுகோள் கடிதத்தை நான் தகுந்த பதிவேட்டில் பதிவு செய்த பின் ஆவணங்களை கொடுத்தேன். அந்த பதிவேட்டை போலிசார் விசாரணையின் போது கொடுக்கவில்லை. வேண்டுகோள் கடிதத்துடன் வழக்கின் வரலாறு குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் சான்றிட்ட நகலையும், கைரேகைக்கான போட்டோ காப்பியும் கொடுத்தேன். கைரேகைக்கு உடைய நபரிடம் எந்த அனுமதியும் நான் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கணினியிலிருந்து பதிவுறக்கம் செய்து தான் ஆவணங்களை கொடுத்தேன். ஆனால் அதற்கான 65 பி இந்திய சாட்சிய சட்டம் சான்றிதழை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைரேகை பதிவுகளை ஆவணத்திலிருந்து எடுக்க அனுமதி கொடுத்தேன்.

Sd/- K. Essakki Magesh Kumar,
Judicial Magistrate No.1,
Kancheepuram.